# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2037/16 - 2017 සැප්තැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.21

*2037/16 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XV)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, (2016, திசெம்பர் 01 ஆந் திகதிய 1995/26 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) இலங்கை ருகுணு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், 1984, சனவரி 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அதன் I ஆம் நிரலில் காணப்படுகின்ற “தொழில்நுட்பவியல் பீடம்” என்னும் பதிவையும் அதன் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

| “நிரல் I<br>துறை | நிரல் II<br>பீடம் |
|---|---|
| இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | 1. தாதித்தொழில் துறை<br>2. வாகடகத் துறை<br>3. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் துறை”. |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2017, செத்தெம்பர் 14.

10-99


1A - PG 3698 — 508 (2017/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.